அலகு 4

# கூட்டாண்மை கணக்குகள் – நற்பெயர்

மாணவர் பெயர் வகுப்பு

## ஒரு மதிப்பெண் வினாக்கள்

*வடிவமைத்தவர்: **கி.அரிராமர்** M.COM.,B.ED.,M.PHIL.,முதுகலைப்பட்டதாரி வணிகவியல் ஆசிரியர், அரசு மேல்நிலைப்பள்ளி,பிள்ளையார்நத்தம், CELL NO-9787428727*

**சரியான விடையைத் தேர்வு செய்யவும்:**

1. பின்வரும் வாக்கியங்களில் எது சரியானது?

(அ) நற்பெயர் ஒரு புலனாகாச் சொத்து (ஆ) நற்பெயர் ஒரு நடப்புச் சொத்து

(இ) நற்பெயர் ஒரு கற்பனைச் சொத்து (ஈ) நற்பெயரினை வாங்க முடியாது

2. உயர் இலாபம் பின்வரும் இரண்டிற்கும் இடையேயான வேறுபாடாகும்

(அ) பயன்படுத்தப்பட்ட முதல் மற்றும் சராசரி இலாபம் (ஆ) சொத்துகள் மற்றும் பொறுப்புகள்

(இ) சராசரி இலாபம் மற்றும் சாதாரண இலாபம் (ஈ) நடப்பு ஆண்டின் இலாபம் மற்றும் சராசரி இலாபம்

3. ஒரே வகை நிறுவனங்களின் சராசரி இலாபவிகிதமாக கருதப்படுவது

(அ) சராசரி இலாபம் (ஆ) சாதாரண இலாப விகிதம்

(இ) எதிர்நோக்கும் இலாப விகிதம் (ஈ) இவைகளில் ஏதுமில்லை

4. கீழ் வருவனவற்றில் எது சரியானது?

(அ) உயர் இலாபம் = மொத்த இலாபம் / ஆண்டுகளின் எண்ணிக்கை

(ஆ) உயர் இலாபம் = கூட்டு இலாபம் / ஆண்டுகளின் எண்ணிக்கை

(இ) உயர் இலாபம் = சராசரி இலாபம் – சாதாரண இலாபம்

(ஈ) உயர் இலாபம் = சராசரி இலாபம் x கொள்முதல் ஆண்டுகள்

LIVEWORKSHEETS

5. சரியற்ற இணையினை அடையாளம் காணவும்

(அ) சராசரி இலாபமுறையில் நற்பெயர் = சராசரி இலாபம் x கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை

(ஆ) உயர் இலாப முறையில் நற்பெயர் = உயர் இலாபம் x கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை

(இ) ஆண்டுத்தொகை முறையில் நற்பெயர் = சராசரி இலாபம் x ஆண்டுத்தொகை காரணியின் தற்போதைய மதிப்பு

(ஈ) கூட்டு சராசரி இலாப முறையில் நற்பெயர் = கூட்டு சராசரி இலாபம் x கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை

6. சராசரி இலாபம் ₹ 25,000 மற்றும் சாதாரண இலாபம் ₹ 15,000 ஆக இருக்கும் போது, உயர் இலாபம்

(அ) ₹ 25,000 (ஆ) ₹ 5,000

(இ) ₹ 10,000 (ஈ) ₹ 15,000

7. 2017– ல் கணக்கேட்டின்படி இலாபம் ₹ 35,000; இலாபத்தில் சேர்ந்துள்ள திரும்பத் திரும்ப நிகழா வருமானம் ₹ 1,000 மற்றும் 2017 ஆம் ஆண்டில் ஏற்பட்ட அசாதாரண நட்டம் ₹ 2,000 எனில், சரிக்கட்டப்பட்ட இலாபம்

(அ) ₹ 36,000 (ஆ) ₹ 35,000

(இ) ₹ 38,000 (ஈ) ₹ 34,000

8. ஒரு வியாபாரத்தின் மொத்த மூலதன மதிப்பு ₹ 1,00,000; சொத்துகள் ₹ 1,50,000 மற்றும் பொறுப்புகள் ₹ 80,000. மூலதனமாக்க முறையில் நற்பெயரின் மதிப்பு

(அ) ₹ 40,000 (ஆ) ₹ 70,000

(இ) ₹ 1,00,000 (ஈ) ₹ 30,000

9.ஒரு நிறுவனத்தின் கடந்த மூன்று ஆண்டுகளின் இலாபங்கள் முறையே **2016- ₹8,000; 2017- ₹10,000; 2018- ₹9,000** சரியான சராசரி இலாபம் எது?

(அ)₹ 9,0000 (ஆ) ₹ 27,0000 (இ) ₹ 18,000 (ஈ) ₹ 20000

10.சராசரி இலாபம் ₹15,000 ஆக இருக்கும்போது 2ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

(அ) ₹ 60,000 (ஆ) ₹ 30,000 (இ)₹ 45,000 (ஈ) ₹ 15,000




LIVEWORKSHEETS